**சுகாதார முறைமைகளைப் பலப்படுத்தும் (எச்எஸ்எஸ்) தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஜ) நிகழ்ச்சித்திட்டம் - 2013**

சுகாதார முறைமைகளைப் பலப்படுத்தும் (எச்எஸ்எஸ்) தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஜ) நிகழ்ச்சித்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஜ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு (ஜீஓஎஸ்எல்) இடையில் செய்துகொள்ளப்பட்ட 2013 யூன் 19 ஆம் திகதிய மாணிய உடன்படிக்கையின் 36 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

சுகாதார முறைமைகளைப் பலப்படுத்தும் (எச்எஸ்எஸ்) தடுப்பு மருந்து மற்றும் நோய் தடைக்கான பூகோள கூட்டமைப்பு (ஜீஏவீஜ) நிகழ்ச்சித்திட்டத்தின் விண்ணப்பப்படிவம் 2007 இன்படி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக சுகாதார அமைச்சு உள்ளது. தாய் மற்றும் சேய் சுகாதார (எம்சீஎச்) சேவைகளின் மேவுகை மற்றும் தரத்தை முன்னேற்றுவதனூடாக பின்தங்கிய பிரதேசங்களில் தொடர்புபட்ட ஆரோக்கியம் மற்றும் மரணமடைதல் தொடர்பான தாய் மற்றும் சேய் சுகாதாரதைக் (எம்சீஎச்) குறைத்தலை விரைவுபடுத்தல்.

ஜீஏவீஜ(எச்எஸ்எஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாவன.

(i) 2014 ஆம் ஆண்டளவில் தேசிய சாதாரண அளவை அடைவதற்கு 10 பின்தங்கிய மாவட்டங்களில் ஆரம்ப சுகாதார நலனோம்பு பதவியணியினரின் சரியான கலப்பை அதிகரித்தல்

(ii) தாய் மற்றும் சேய் சுகாதார சேவைகளின் விநியோகத்தலிற்கான 10 பின்தங்கிய மாவட்டங்களில் தேசிய நியமனங்களை ஈடுசெய்வதற்கான உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்துகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தல்.

(iii) 2014 ஆம் ஆண்டளவில் நடுத்தர வசதி முகாமையாளர்களால் 10 பின் தங்கிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட தாய் மற்றும் சேய் சகாதார சேவைகளின் மீது போதிய கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்தல்.

ஜீஏவீஜ (எச்எஸ்எஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் விணண்ப்படிவம் 2007 இன் படி நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 4,505,000 ஆனதுடன் முழுத்தொகையும் பூகோள கூட்டமைப்பில் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் தனது நடவடிக்கைகளை 2008 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படவேண்டுமெனப் பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான நிகழ்ச்சித்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) ஜீஏவீஐ விண்ணப்ப படிவம் 2007 இல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்.

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 மற்றும் 6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) நிகழ்ச்சித்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) ஜீஏவீஜ விண்ணப்ப படிவம் 2007 இல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின்படி மீளாய்வாண்டிற்கான நிகழ்ச்சித்திட்டச் செலவினம் ரூபா 108,704,141 தொகையாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 38,250,000 தொகையாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான சொத்துக்கள் | 27,693,628 | 23,161,622 | 108,761,632 |
| சிவில் வேலைகள் (புதுப்பித்தல் மற்றும் திருத்தங்கள்) | 54,922,040 | 27,888,434 | 165,305,860 |
| பயிற்சி | 18,027,961 | 35,356,649 | 86,917,775 |
| ஏனைய தொழிற்பாட்டுக் கிரயம் | 8,150,514 | 5,193,791 | 20,264,733 |
| மொத்தம் | 108,794,143 | 91,600,496 | 381,250,000 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

நிகழ்ச்சித் திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மீதான கணக்குப் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றம் 2013 திசெம்பர் 31 வரைக்குமான திரண்ட செலவினம் என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிக்க வேண்டுமென உடன்பட்ட தொகை | | ஷ ஆண்டுப் பாதீட்டில் மேலதிக பாதீட்டு ஒதுக்கீடு | மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட தொகை | | 2013 திசெம்பர் 31 இல் பயன்படுத்தப்பட்ட தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| ஜீஏவீஐ கூட்டமைப்பு | 4,505,000 | 516,677.613 | 108,800,000 | 899,310 | 108,794,143 | 3,385,533 | 381,250,000 |
| ஜீஓஎஸ்எல் | - | - | 3,687,470 | 27,188 | 3,534,547 | 27,188 | 3,534,547 |
| மொத்தம் | 4,505,000 | 516,677.613 | 112,487,470 | 926,710 | 112,328,690 | 3,412,721 | 384,784,547 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பூகோள கூட்டமைப்பிடமிருந்து ரூபா 516,677,613 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 4,500,000 கிடைத்திருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 வரையான திரண்ட செலவினம் கிடைத்த மொத்த மாணியத்தில் 75 சதவீதத்தைக் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 381,250,000 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 3,385,533 தொகையாக இருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டு மதிப்பீடுகளின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 165,000,000 தொகையான ஒதுக்கீடு ரூபா 112,487,470 ஆகக் குறைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 112,328,690 மீளாய்வாண்டில் செலவிடப்பட்டது.

(ஆ) முன்னேற்ற அறிக்கையின் படி மீளாய்வாண்டில் ரூபா 460,050,311 கிரயத்தில் 31 நடவடிக்கைகள் அமுலாக்கப்பட வேண்டுமென்ற பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அந் நடவடிக்கைகளில் எதுவும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 18 நடவடிக்கைகளிற்கான முற்பணங்களாகச் செலுத்தப்பட்ட ரூபா 2,940,696 ஆன தொகையும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்படி, உள்ளவற்றிக்கு மேலதிகமாக மீளாய்வாண்டில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஏனைய 9 நடவடிக்கைகளின் கீழ் செலவிடப்பட்ட வேண்டுமென மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா

6,248,611 தொகையில் அத்தகைய நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு ரூபா 1,938,241 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. ஆகையால் அத்தகைய நடவடிக்கைகளின் மதிப்பீடு முறையாக செய்யப்படவில்லை என்பதைக் காட்டுகின்றது. மேலும், சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட நிதிகள் 14 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரை வீச்செல்லையில் இருந்தன.

(ஈ) நிகழ்ச்சித்திட்டத்தின் உடன்படிக்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளின்படி, சுகாதார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு (ஜீஏவீஐ) நிகழ்ச்சித்திட்டத்தின் நம்பகத்தன்மை மற்றும் செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் பிரமாணங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. என்பவற்றை உறுதி செய்வதற்குப் பொறுப்புடையதாகும். எனினும், ஒரு உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டோ அல்லது மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டோ இருக்கவில்லை. மேலும் 2010 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிற்காக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சுகாதார அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரினால் சிபார்சுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மத்திய மாகாண சபையால் வழங்கப்பட்ட 261.2.2. ஆம் இலக்க நிதி விதியின்படி, ஏதாவது நோக்கத்திற்கு பெறப்பட்ட முற்பணங்கள் ஒரு கிழமைக்கிடையில் தீர்க்கப்பட வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது. எனினும், நுவரெலியா மாவட்ட மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காகப் பெறப்பட்ட ரூபா 170,050 கூட்டுமொத்த தொகையான முற்பணங்கள் 56 நாட்கள் தொடக்கம் 134 நாட்கள் வரையான தாமதங்களின் பின்னரே திர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 6.2 பௌதீக முன்னேற்றம்

குறித்த நிகழ்ச்சித்திட்டக் காலத்திற்கிடையில் நோக்கங்களின் எய்துகையை உறுதிப்படுத்துவதற்காக காலாண்டு, அரையாண்டு முதலியவற்றிலான நிதிசார் மற்றும் பௌதிக ரீதியில் சுட்டிக் காட்டப்படுகின்ற முழு நிகழ்ச்சித்திட்டக் காலத்தையும் உள்ளடக்கிய முழுமையான விபரமான நடவடிக்கைத் திட்டம் இருக்க வேண்டிய போதிலும் அத்தகைய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

நிகழ்ச்சித்திட்டத்தின் வளங்கள் குறித்த நோக்கங்களிற்காக சுதந்திரமான முறையில் பிரதேச அலுவலகங்களினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் கிழே விபரிக்கப்பட்டுள்ளன.

(அ) நிலையான சொத்துக்களில் 7 விடயங்களை ரூபா 245,158 கிரயத்தில் கொள்வனவு செய்வதற்காக 2013 திசெம்பர் 21 இல் நிகழ்ச்சித்திட்டங்களில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத்தகைய சொத்துக்கள் 2014 செப்தெம்பர் 16 வரையிலும் கூட கிடைத்திருக்கவில்லை.

(ஆ) கடுகண்னாவ மாகாண மருத்துவ பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளிற்காக ரூபா 1,553,776 தொகையை நிகழ்ச்சித்திட்டம் செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த வேலைகள் நிகழ்ச்சித்திட்டத்தால் மேற்கொள்ளப்படவேண்டுமென்பதை குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவையாக இருக்கவில்லை. மேலும், பிரதான காட்சிக்கூடத்திற்கு குளிரூட்டல் சாதனம் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 1,408,000 தொகை 2014 மார்ச் 31 வரை பொது வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மத்திய மாகாண சுகாதார சேவைகளின் மாகாண பணிப்பாளரினால் அத்தகைய ஒதுக்கீடு ஏற்கனவே செலவிடப்பட்டதாக சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள்

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) மாகாண அலுவலர்களின் செயலாற்றல்